உதகமண்டலம் மாவட்ட நீதிமன்றத்தில் **2025–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் 12–ஆம் நாள்** வாதி / பிரதிவாதி/ மனுதாரர்/எதிர்மனுதாரர் என்பவரின் சாட்சியாகிய **வா.சா.3–**ன் வாக்குமூலம் 1969–ஆம் ஆண்டு 44வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திரு.மகேசன், கிரேடு 1 பெஞ்ச் கிளர்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| O.S. No | : | 50 of 2020 |
| பெயர் | : | விஜயகுமார் |
| தந்தை /கணவர் பெயர் | : | |
| வயது | : | |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுக்கா | : | |

---

தேதி : 12.8.2025.

P.W.3

**வா.சா.3 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, முதல் விசாரணை:**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்தது, அதன்பேரில் நான் இன்று சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் Exhibit A2 உயில் சாசனத்தில் 5வது பக்கத்தில் இருக்கும் 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான், என்னுடைய இந்த கையொப்பம்தான் Exhibit A10 ஆகும், இந்த Exhibit A10க்கு முன்பு என்னுடைய பெயரையும், Exhibit A10க்கு கீழே என்னுடைய விலாசத்தையும் எழுதியுள்ளேன். நடராஜன் செட்டியார்தான் Exhibit A2 உயிலை, சண்முகத்தின்

சித்தியான பாக்கியலட்சுமியை எழுதச்சொன்னார். Exhibit A2 உயிலை எழுதியபோது நடராஜன் செட்டியார், அவர் மனைவி ராஜம்மாள், பாக்கியலட்சுமி சித்தி, அவருடைய கணவர் பரமசிவம் மற்றும் நானும் இருந்தோம். மேட்டுபாளையத்தில் உள்ள நடராஜன் செட்டியார் வீட்டில் வைத்துதான் Exhibit A2 உயில் எழுதப்பட்டது. நான் 1982ஆம் ஆண்டுமுதல் 2017ஆம் ஆண்டுவரை அருவங்காடு வெடிமருந்து தொழிற்சாலையில் வேலை பார்த்து, 2017ஆம் ஆண்டு பணிஓய்வு பெற்றேன்.

நடராஜன் செட்டியாரின் மகன் சண்முகமும், நானும் நண்பர்கள், நாங்கள் இருவரும் ஊட்டி ஆர்ட்ஸ் காலெஜில் P.U.C. ஒன்றாக படித்தோம். உயில் சாசனம் எழுதியபோது நடராஜன் செட்டியார் திடகாத்திரமாக நன்றாகதான் இருந்தார். நடராஜன் செட்டியார் எனக்கு போன் செய்து மேட்டுபாளையம் வீட்டுக்கு வரச்சொன்னார், முக்கியமான விசயம் இருக்கிறது வா என்று சொன்னார், நான் அவரிடம் எனக்கு டியூட்டி இருக்கிறது, டியூட்டி முடித்துவிட்டு வருகிறேன் என்று சொன்னேன், பிறகு நான் டியூட்டி முடித்துவிட்டு அன்று மாலை 5 மணிக்குதான் பஸ் ஏறி இரவு 7 மணிக்கு மேட்டுபாளையத்திற்கு நடராஜன் செட்டியார் வீட்டிற்கு போனேன். பாக்கியலட்சுமி உயிலை எழுதியபிறகு அதன் எல்லா பக்கங்களிலும் நடராஜன் கையொப்பம் போட்டார். என்னிடம் காண்பிக்கப்படும் Exhibit A2 உயிலில் அனைத்து பக்கங்களிலும் A.N.நடராஜன் செட்டியார் கையொப்பம் போட்டார்,

அப்புறம் பாக்கியலட்சுமி சித்தி அந்த உயிலில் கையொப்பம் போட்டார், அதன் பிறகு நான் அந்த உயிலில் கையொப்பம் போட்டேன்.

**<u>1ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

இல்லை.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.08.12 17:37:05 +0530